" විශිෂ්ඨ රාජ්‍ය සේවාවක් සඳහා ඇප කැපවෙමු "
ප්‍රධාන ලේකම් කාර්යාලය - බස්නාහිර පළාත
பிரதான செயலாளர் அலுவலகம் - மேல் மாகாணம்
OFFICE OF THE CHIEF SECRETARY - WESTERN PROVINCE
204, ඩෙන්සිල් කොබ්බෑකඩුව මාවත, බත්තරමුල්ල.
204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.
204, Denzil Kobbekaduwa Mawatha, Battaramulla.
ප්‍රධාන ලේකම් / பிரதான செயலாளர் / Chief Secretary – දුරකථන / தொலைபேசி / Telephone - 011 - 2092599; ෆැක්ස් / பெக்ஸ் / Fax - 011 - 2092601; ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail - chiefsecretary@wpc.gov.lk
පොදු දුරකථන / தொலைபேசி இலக்கம் / General Telephone - 011 - 2093000
SLSI – ISO 9001 – SLAB ACCREDITED – ISO/IEC: 17021 QMS-001-01

මගේ අංකය / எனது இலக்கம் / My No. CSWP/ADM/18-38/FI/01-2019 ඔබේ අංකය / உமது இலக்கம் / Your No. දිනය / திகதி / Date 2019/04/24

ஆளுநர் செயலாளர் (மே.மா.),
செயலாளர், மாகாண அரச சேவை ஆணைக்குழு (மே.மா.),
சபைச் செயலாளர் (மே.மா.),
அனைத்து அமைச்சுக்களதும் செயலாளர்கள் (மே.மா.),
பிரதிப் பிரதான செயலாளர் (நிர்வாகம்/ ஆளணி மற்றும் பயிற்சி/ நிதி/ திட்டமிடல்/ பொறியியல்),
மாகாண வருமான ஆணையாளர் (மே.மா.),
பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் (மே.மா.),
நிர்வாக அலுவலர் (நிர்வாகம்)
பிரதான செயலாளரின் இணைப்புச் செயலாளர்,

**அரச நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 21/88(I), 03/2019, 02/2019, 06/2019 மற்றும் 05/2019 ஆகியவற்றை மேல் மாகாணத்திற்கு உரித்தாக்கிக் கொள்ளல்.**

அரச நிர்வாக மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கைகளை மேல் மாகாணத்திற்கு உரியதாக்கிக் கொள்வதற்கு கௌரவ ஆளுநர் அங்கீகாரம் அளித்துள்ளதாக ஆளுநர் செயலாளரின் இலக்கம் GOS/ADM/02/19/01/2019 மற்றும் 2019.04.18 ஆந் தேதியிட்ட கடிதத்தின் மூலம் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (அச்சுற்றறிக்கைகளின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.)

| தொடரிலக்கம் | சுற்றறிக்கை இலக்கம் மற்றும் திகதி | விடயம் |
|---|---|---|
| 01. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 21/88(I), 2019-01-29 | கடமையிலீடுபட்டிருக்கும் போது பயங்கரவாத வன்முறைச் செயற்பாடுகளால் காயமடையும் / நிரந்தரமாக அங்கவீனமடையும் அரச அலுவலர்களுக்கு / மாகாண அரச சேவை அலுவலர்களுக்கு / அரச கூட்டுத்தாபன அலுவலர்களுக்கு வைத்திய உதவிக் கொடுப்பனவு / நஷ்டஈடு வழங்குதல் மற்றும் பயங்கரவாத வன்முறைச் செயற்பாடுகளால் மரணமடையும் அவ்வாறான அலுவலர்களில்/ ஊழியர்களில் தங்கியிருப்போருக்கு நஷ்டஈடு வழங்குதல். |
| 02. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2019, 2019-02-20 | தாபனக் கோவை பகுதி II இன் XLVIII அத்தியாயத்தின் 19.5 ஆம் உபபிரிவின் கீழ் ஒழுக்காற்று விசாரணை அலுவலர்களது பெயர்ப்பட்டியல் |
| 03. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 02/2019, 2019-02-22 | பூரண சம்பளத்துடன் கூடிய விடுமுறைக்கான கட்டாய சேவைக்காலத்திற்குள் கடமையிலுள்ள அலுவலருக்கு சம்பளமற்ற கற்றல் விடுமுறை வழங்குதல். |
| 04. | அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 06/2019, 2019-02-27 | 2016 இலக்கம் 12 கொண்ட தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தாபனக்கோவையின் பகுதி I இன் பிரிவினைத் திருத்துதல். |

| | | |
|---|---|---|
| 05. | அரச நிர்வாக சுற்றறிக்கை கடிதம் இலக்கம் 15/2019, 2019-03-05 | அரசியல் உரிமைகளை அனுபவித்தல் தொடர்பான தாபனக் கோவையின் XXXII அத்தியாயத்தின் 2:3:2 ஆம் உபபிரிவினைத் திருத்துதல். |

02. அச்சுற்றறிக்கையின்படி செயற்படுமாறும் உங்களின் கீழுள்ள அனைத்து திணைக்களப் பிரதானிகளுக்கும், தாபனப் பிரதானிகளுக்கும் மற்றும் அலுவலர்களுக்கும் தெரியப்படுத்துமாறும் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

கே.என்.சூரியாரச்சி,
உதவிப்பிரதான செயலாளர் (நிர்வாகம்),

ஒப்பமிட்டது - பிரதீப் யஸரத்ன,
பிரதான செயலாளர்,
மேல் மாகாணம்

அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை : 02/2019

எனது இல: EST-06/03/LEA/3161(2)

பொது நிருவாக மற்றும்
அனர்த்த முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.
2019.02. 22

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண பிரதம செளலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**முழுமையான சம்பளத்துடன் பெற்றுக்கொள்ளப்பட்ட விடுமுறையின் கட்டாய சேவைக்காலத்தினுள் சேவையாற்றுகின்ற அலுவலரொருவருக்கு சம்பளமற்ற கற்கைசார் விடுமுறை வழங்குதல்**

தாபன விதிக்கோவையின் XV ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவு தொடர்பாக தங்களது கவனம் ஈர்க்கப்படுகின்றது.

02. மேற்படி பந்தியில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள உப பிரிவுகளை உள்ளடக்கி திருத்தியமைப்பதற்கு 2018.09.18 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

5:3 முழுமையான சம்பளத்துடன் கூடிய கற்கைசார் விடுமுறையைப் பெற்று அதற்குறிய கட்டாய சேவைக் காலத்தினுள் பணி புரிந்துவரும் அலுவலரொருவருக்கு அவர் ஏற்கவே பெற்றுள்ள பட்டப்பின் தகைமையை விட உயர் தகைமையொன்றுக்காக இங்கு XII ஆம் அத்தியாயத்தின் 15 அல்லது 16 ஆம் பிரிவுகளின் கீழ் சம்பளமற்ற கற்கைசார் விடுமுறை வழங்க முடியும். அவ்வாறு விடுமுறை பெறும் சந்தர்ப்பத்தில் அந்த அலுவலர் ஏற்கவே பிணிக்கப்பட்டுள்ள உடன்படிக்கைக்கு மேலதிகமாக 9 ஆம் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ள உடன்படிக்கையையும் செய்வது அவசியமாகும்.

5:3:1 சம்பளமற்ற கற்கை விடுமுறையை நிறைவு செய்து அலுவலர் மீண்டும் சேவைக்கு அறிக்கையிட்டதன் பின்னர் கற்கை விடுமுறை வழங்கப்படும் சந்தர்ப்பமாகும் போது, ஆரம்ப ஒப்பந்தத்தில் சேவையாற்றுவதற்கு மீதமாகவுள்ள கட்டாய சேவைக்காலம் மற்றும் இரண்டாவது ஒப்பந்தத்தின் கீழ் சேவையாற்றுவதற்கான கட்டாய சேவைக்காலம் ஆகிய இரண்டின் கூட்டுத்தொகைக்கு சமமான கட்டாய முழு சேவைக்காலமும் இங்கு 4:10 உப பிரிவின் மூலம் விதிக்கப்பட்டுள்ள ஆக கூடிய 10 ஆண்டுகால வரையறை குறித்து கவனஞ் செலுத்தாது அரசாங்கத்திற்காகசேவையாற்றுதல் வேண்டும்.

5:3:2 அலுவலரை கற்கையைத் தொடர்வதற்காக அனுப்பும் போது, அவர் பூர்த்தி செய்ய வேண்டிய கட்டாய சேவைக்காலமானது அவர் கட்டாய ஓய்வூதிய வயதை அடைய முன்னர் பூர்த்தி செய்வதற்கு போதிய கால எல்லை இருக்கின்றதா என அறிந்துகொள்ள வேண்டியது திணைக்களத் தலைவரின் பொறுப்பாகும்.

5:3:3 முழுமையான சம்பளத்துடனான கற்கை விடுமுறையொன்று தொடர்பாக அரசாங்கத்துடன் ஒப்பந்தமொன்றினை மேற்கொண்டுள்ள அலுவலரொருவருக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டாய சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்யாது வெளிநாட்டு வேலை வாய்ப்பு தொடர்பாக விடுமுறை வழங்க முடியாது.

ஒப்பம்./ ஜே. ஜே. ரத்னசிரி
செயலாளர்
பொது நிருவாக மற்றும்
அனர்த்த முகாமைத்துவ அமைச்சு